சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 19.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **123/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-11 |
| சாட்சியின் பெயர் | : | சுரேஷ் |
| தந்தை பெயர் | : | தங்கராசு |
| கிராமம் | : | ஜீவா தெரு, அண்ணா நகர், |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | கொத்தனார் |
| வயது | : | 43 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 குமாரை தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு முன்பு அறிமுகம் கிடையாது. கடந்த 20.06.2025 ம் தேதி

திருத்துறைப்பூண்டியில் உள்ள விஜிலா தியேட்டர் எதிரில் உள்ள தற்காலிக பேருந்து நிலையத்தில் இந்த எதிரியை போலீசார் கைது செய்தனர். அப்போது என்னவென்று விசாரித்தேன். விசாரித்து தெரிந்துகொண்டேன். எதிரியை என் முன்பாக கைது செய்வதாக கூறி போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். போட்டுக்கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டுக் கொடுத்தேன் என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.19 16:50:53 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.